**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**SESSION CASE NO.106/2023**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 01 ஆம் நாள் செவ்வாய் கிழமை
அ.சா.11 (பட்டியல் சாட்சி–12) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராகவன் | த/பெ.: | தனபால் |
| கிராமம்: | தேசிங்குராஜபுரம், பாமணி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | ஸ்பேர் பார்ட்ஸ் சேல்ஸ் மேன் |
| வயது: | 27 | முகவரி: | தேசிங்குராஜபுரம், பாமணி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 01.07.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்பேர் பார்ட்ஸ் கடையில் சேல்ஸ் மேனாக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 மற்றும் சாட்சிகள் கோமதி, சித்ரா, கஸ்தூரி, சஞ்சய், மாதவன், ரஞ்சித், மாரியப்பன், அஜித் ஆகியோர்களை தெரியும். எதிரியை தெரியும். தேதி, மாதம் தெரியாது. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு நான் வசிக்கும் பகுதிக்கு அருகில் வசித்து வந்த சந்தியா என்பவர் தூக்கு மாட்டிக் கொண்டதாக சொன்னார்கள். இறந்து போன பெண்ணின் அண்ணன் சஞ்சய், நான், ரஞ்சித் ஆகியோர்கள் சந்தியா வீட்டிற்கு சென்றோம். நான் விசாரித்தபோது சந்தியா என்பவர் செல்லும் வழியில் இறந்து விட்டதாக சொன்னார்கள். போலீசார் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அப்போது நான், எனது தம்பி, இறந்து போன பெண்ணின் உடைய அண்ணன், பெண்ணின் பெற்றோர்கள் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்தோம். பின்னர் போலீசார் என்னை அழைத்து கையெழுத்து போட சொன்னார்கள். நானும், அஜித்

என்பவரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் முதலாவதாக போடப்பட்ட கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

கடந்த 14.02.2022–ம் தேதி நான் வேலைக்கு சென்றிருந்ததாகவும், அப்போது எங்களது உறவினரான சந்தியா அவரது வீட்டில் தூக்கி தொங்கி விட்டதாகவும், அதனை விசாரித்தபோது சந்தியா காதலித்த யோகேஷ் சந்தியாவிடம் என்னடி எப்ப பார்த்தாலும் வீட்டுல அப்பா, அம்மா திட்டுறாங்கன்னு சொல்லிகிட்டு எங்கயும் வரமாட்டேங்குற என்றும், இன்னைக்கு லவ்வர்ஸ் டே எல்லாரும் ஜாலியா இருக்குறாங்க உன்னை போய் காதலித்தேன் பாரு எனக்கூறியும் நீ இருக்குறதை விட செத்துப்போய் விடலாம் என திட்டி சென்று விட்டதாகவும், அதன் பேரில் சந்தியா இறந்து விட்டதால் அவரது இறப்பில் சந்தேகம் இருப்பதாக கூறி எதிரியை திருத்துறைப்பூண்டி போலீசார் தேடி வந்த நிலையில் கடந்த 03.03.2022–ம் தேதி மதியம் எதிரி அவரது வீட்டிற்கு அவரது படிப்பு சான்றிதழ்களை எடுக்க வந்தவரை காவல் துறையினர் கைது செய்து விட்டதாகவும், அதனை கேள்விபட்டு வந்த நானும், என்னுடன் வந்த அஜித் என்பவரும், அருகிலிருந்தவர்கள் எதிரி யோகேஷை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் எடுத்தார்கள் என்றும், அதனை எங்கள் முன்னிலையில் விசாரித்தார்கள் என்று நானும், அஜித்தும் கையொப்பம் செய்தோம் என்றும், எங்களை போலீசார் விசாரித்தனர் என கூறி விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.